
பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறங்களில் சிக்கனம் மற்றும் நாணய சங்கம் அமைத்தல் குறித்த பயிற்சி

கையேடு




## தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூர்




பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறங்களில் சிக்கனம் மற்றும் நாணய சங்கம் அமைத்தல் குறித்த பயிற்சி

## கையேடு

ஆக்கம் :

நகராட்சி நிர்வாக ஆணையரகம்

சென்னை

பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

திருத்திய பதிப்பு : 2007

வெளியிடுவோர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி : 0422-2441086,
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net
இணையம் : tnius.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1. | சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் அமைப்பு உருவாக்குதல் | 3 |
| 2. | சிக்கனம் மற்றும் நாணயச் சங்கத்தின் குழுக்கூட்டங்கள் மற்றும் விவாதமுறை | 7 |
| 3. | சங்கத்தின் பொது நிர்வாகம் | 10 |
| 4. | சங்க நிதி நிருவாகம் | 14 |
| 5. | நிதிநிர்வாகம் - சங்கத்திலிருந்து உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல் | 18 |
| 6. | குழுக்கூட்டங்களில் தேவைப்படும் ஆற்றல் மிக்க கேள்விகள் | 24 |
| 7. | பதிவேடுகள் | 29 |
| 8. | இணைப்பு - I | 40 |
| 9. | இணைப்பு - II | 41 |

# முன்னுரை

"நமது சமுதாயத்திலிருந்து வறுமையை முற்றிலும் அகற்றுவதற்காகக் கடந்த சில ஆண்டுகளாக, மத்திய அரசு பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் (Swarna Jayanthi Shahari Rojgar Yogna - SJSRY) செயல்படுத்தி வருகிறது. மாநில அரசு மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக இத்திட்டச் செயலாக்கத்திற்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது. அடிப்படையில் சமுதாயக் குழுவினை ஏற்படுத்தி, அதன் வாயிலாகச் சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தவும் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தி நகர்ப்புற வறுமை ஒழிப்புக்காகச் செயல்படுத்தப்பட்ட முந்தைய திட்டங்களைப் போல் அல்லாது இந்தத் திட்டம் அடிப்படையில் சமுதாயக் குழுக்களை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய மக்களின் நேரிடையான பங்களிப்பின் மூலமே செயல்படுத்தப்படுகிறது. மேலும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற ஏழை மக்களை இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பெண்களின் மூலம் நேரிடையாகத் திட்டம் ஏழைக்குடும்பங்களைச் சென்றடைய ஒரு வாய்ப்பாக அமைகிறது. இத்திட்டம் வெற்றியடைய வேண்டுமெனில் பயிற்சிகள் மற்றும் தகவல், கல்வி, தொடர்பு பேன்றவைகள் அத்தியாவசியமாகின்றன. இதை நடைமுறைப் படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு கோவையிலுள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தை (Tamilnadu Institute of Urban Studies - TNIUS) இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கும் முதன்மை நிறுவனமாகத் தெரிவு செய்துள்ளது.

அதன்படி இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், அலுவல் சாரா களப் பணியாளர்கள் மற்றும் நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இத்திட்டம் குறித்த உரிய வழி முறைகள், திட்டக் கோட்பாடு, திட்டச் செயலாக்கம், திட்டக் கண்காணிப்பு மற்றும் ஆங்காங்கே நிகழ்ந்து வரும் வெற்றிச் செய்திகள் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதிலும், தொகுப்பதிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாகப் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிக்கன மற்றும் சேமிப்பு நாணயச் சங்கம் (Thrift and credit society) என்ற தலைப்பின் கீழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. இதற்காகத் தயாரிக்கப்பட்ட இக்கையேடு, துறைசார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் பயனுடையதாக இருக்குமென நம்புகிறேன்.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டப் பயிற்சியினை நடத்துவதில் அனுபவமும் பயிற்சியும் பெற்று எங்களுக்கு முழு ஒத்துழைப்பினை நல்கிவரும் அனைத்து உதவித் திட்ட அலுவலர்களுக்கும் மற்றும் சமுதாய அமைப்பாளர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கோயம்புத்தூர் - 641 011**

**ப. கனகசபாபதி**
**இயக்குநர்**

# 1. சிக்கனம் மற்றும் நாணயச் சங்கத்தின் நோக்கங்கள் மற்றும் அமைப்பு உருவாக்குதல்

பெண்கள் சமுதாயத்தில் முன்னேறுவதற்காக உருவாக்கப்படும் பொருளாதாரத் திட்டமே சிக்கனம் மற்றும் நாணயச் சங்கங்கள் ஆகும்.

பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கும் முறைப் படுத்தப்பட்ட அமைப்புகளுக்கும் பல வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் பொருளாதார உதவி செய்கின்றன.

ஆனால், நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதியில் வாழும், பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய ஏழை மக்கள் அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் அடகுக் கடைக்காரர்கள், கந்து வட்டிக்காரர்கள் ஆகியோர்களை நம்பி வாழ்கின்றனர். அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதால் நாளடைவில் வட்டி மற்றும் அசலைக்கட்ட இயலாமல் போய் பணம், பொருள், வீடு ஆகியவற்றை இழக்கின்ற அவல நிலை ஏற்படுகிறது.

இதனைத் தடுப்பதற்குப் **'பெண்களுக்காகப் பெண்களே'** செயல்படுத்தும் திட்டமாகச் சிக்கனம் மற்றும் நாணயச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

## நோக்கங்கள்

- சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்.
- சிறு மற்றும் அவசரக் கடன் தேவையை நிறைவு செய்தல்.
- கடன்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கண்ணியமாக திரும்பச் செலுத்தக் கற்றுக் கொள்ளுதல்.
- அவசரக் கடன் தேவைகளுக்குக் கந்துவட்டிக்காரர்களைச் சார்ந்து இருப்பதைத் தவிர்த்தல்.

- ஏழை மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை இடைத்தரகர்களின்றி, நேரடியாக முழு லாபம் பெறக்கூடிய வகையில் விற்பனை செய்யும் வழி முறையையும் ஆற்றலையும் கற்றுக் கொடுத்தல்.
- குடும்பத்தில் சொத்துகள் வாங்கப்படும் போது மகளிர் பெயரில் அல்லது கணவருடன் கூட்டாக வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல். மேலும் குடும்பச் சொத்துகளில் சம பங்கு பெறச் செய்தல்.
- தலைமைப் பண்புகளையும் நிருவாகத் திறமையையும் வளர்த்தல்.
- வங்கியாளருக்கும் நகர்ப்புற ஏழை மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தி அதன்மூலம் நம்பிக்கை மற்றும் ஊக்கத்தை உருவாக்குதல்.

## சிக்கன நாணயச் சங்கத்தின் மூலம் வளர்க்கப் படும் திறமைகள்

- பெண்களுக்குச் சிறந்த நிதி நிருவாகத்தைக் கற்றுக் கொடுத்தல்.
- பெண்கள் நடைமுறை (வாழ்க்கைக் கல்வியைப்) பெறச் செய்தல்.
- பெண்களின் தொழில் திறமையை வளர்த்தல்.
- பெண்களுக்குத் தன்னம்பிக்கையை உருவாக்குதல்.
- பெண்கள் ஒற்றுமையுடன் குழுவாக ஒருங்கிணைந்து செயல்படும் திறமையை ஊக்குவித்தல்.
- பெண்களின் தலைமைப்பண்பு, பேச்சாற்றல் போன்ற ஆளுமைத் திறமைகளை வளர்த்தல்

## சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கம்

ஒரே பகுதியில் வசிக்கும் ஒத்த கருத்துகளுடைய 10 இலிருந்து 20 ஏழைப் பெண்கள் உறுப்பினர்களாக ச் சேர்ந்து ஒருவருக்கு

ஒருவர் உதவி செய்யும் ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்கிச் செயல்படுவதுடன், அவர்களின் குடும்பங்களின் முன்னேற்றம் அவர்கள் வாழும் பகுதியில் சமூகப் பொருளாதார முன்னேற்றம் அமையவும் தன்னார்வத்துடன் செயல்படும் பதிவு செய்யப்பட்ட அமைப்பே **'சிக்கனம் மற்றும் நாணயச் சங்கம்'** ஆகும்.

## அமைப்பு உருவாக்கம்

ஏழைப் பெண்கள் அதிகமாக உள்ள குடியிருப்புகளைத் தேர்வு செய்து சுமார் 20 ஏழைப் பெண்களை ஒருங்கிணைத்து அண்டை வீட்டுக்குழு (NHC) உருவாக்கப்படுகின்றது. இவர்களில் ஒருவரை பிரதிநிதியாக தேர்ந்து எடுத்து அவரை இருப்பிட சமுதாயத் தொண்டர் (RCV) என அழைக்கப்படுவார்.

சுமார் 10 அண்டை வீட்டுக் குழுக்களை (NHC) அதாவது 10 இருப்பிட சமுதாயத் தொண்டர்களை (RCV) (200 வீடுகள்) ஒருங்கிணைத்து அண்டை வீட்டுக் கமிட்டி (NHC) அமைக்கப்படுகிறது. அண்டை வீட்டுக் கமிட்டியில் இருக்கக்கூடிய அனைத்து சமுதாயத் தொண்டர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அவரை கன்வீனர் என அழைக்கப்படுவார். கன்வீனர் இக்குழுவின் அலுவல்களை கவனிப்பார்.

இந்த அண்டை வீட்டுக் கமிட்டி உறுப்பினர்கள் விருப்பமுள்ளவர்கள் ஒரு குழுவாக இணைந்து சிக்கன நாணயச் சங்கத்தை உருவாக்க வேண்டும்.

இவர்கள் மாலை நேரங்களில் கூடிச் சிக்கன நாணயச் சங்கம் பற்றிப் பேச வேண்டும்.

இந்த அமைப்பின் நிருவாகத்தில் உதவி செய்ய சேவை மனப்பான்மையுள்ள எழுதப்படிக்கத் தெரிந்த நம்பிக்கைக்குரிய ஏழைப் பெண்கள், பொறுப்பாளராகக் குழுவால் தேர்வு செய்யப்பட வேண்டும்.

வருமானம், கல்வியறிவு, வேலைவாய்ப்பு மற்றும் சொத்து அடிப்படையில் பிற்பட்டோராகக் கருதப்படும் பெண்களைக் குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்தல் முக்கியம்.

முறையாகக் கூட்டங்களை நடத்தி அமைப்பைத் தொடக்குதல், குழுக் கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்கச்செய்தல்.

பல இடங்களில் குழு செயல்பட்டு வருகின்ற நிலையில் புதிய அமைப்பு உருவாகும் போது பெண்கள் வேறு குழுக்களில் உறுப்பினராக இருக்கின்றார்களா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## சங்க உறுப்பினர்களுக்குரிய தேர்வுத் தகுதிகள்

- ✔ உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழைப் பெண்களாக இருத்தல் வேண்டும்.
- ✔ உறுப்பினர்கள் ஒரே பகுதியில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.
- ✔ திருமணமானவராக இருப்பது விரும்பத்தக்கது.
- ✔ பல காரணங்களுக்காகப் பல வருடங்களாக வருமானத்தை ஈட்டிக் குடும்பச் சுமையைச் சுமக்கும் திருமணமாகாத பெண்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.
- ✔ 18 முதல் 60 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
- ✔ தன்னார்வம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒற்றுமை உணர்வு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- ✔ ஆதி திராவிடப் பெண்கள், குடிசைவாழ்பெண்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்றோர் மற்றும் நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு முன்னுரிமை அளித்தல் முக்கியம்.

## தவிர்க்க வேண்டியவை

- ✗ கடன் பெற்றுத்தரப்படும் என்று கூறி ஏழைப் பெண்களிடம் சங்கம் அமைப்பது தவறு. இத்தகைய சங்கம் நிலைத்துச் செயல்படாது. மாறாக ஏழைப் பெண்களுக்கு ஏமாற்றத்தையே நாளடைவில் தரும்.
- ✗ ஒரே குடும்பத்தைச் சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைச் சங்கத்தில் சேர்க்காதிருத்தல் வேண்டும்.
- ✗ வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மகளிரைக் குழுக்களில் சேர்க்கக்கூடாது.

# 2. சிக்கன மற்றும் நாணயச் சங்கத்தின் குழுக் கூட்டங்கள் விவாத முறை

இச்சங்கத்தின் இயக்கத்திற்குக் குழு விவாதமே முக்கிய இடம் வகிக்கிறது.

- சிக்கன மற்றும் நாணயச் சங்கத்தின் கூட்டத்தைச் சிறப்பான முறையில் கூட்டி வழி நடத்தத் தகுதியான, ஆர்வமுள்ள, பேச்சாற்றல் மிக்க, தலைமைப்பொறுப்பிற்கேற்ற, மற்ற பெண்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெண்கள், தலைவர், செயலர், பொருளாளராகத் தேர்வு செய்யப்படுவது மிக முக்கியம்.
- கணக்குப்பதிவேடுகளைப் பராமரிக்கக் கூடிய கல்வியறிவுள்ள ஒரு பெண்ணைப் பொருளாளராகத் தேர்வு செய்வது அவசியம்.
- அமைப்புச்சங்கம் இயக்கத்திற்குக் குழு விவாதம் முக்கிய இடம் வகிக்கின்றது.
- குழு விவாதத்தில், குழு விவாதப் பொருளும் (agenda) விதிமுறையும் முக்கிய அம்சங்களாகும்.
- சங்கம் என்பது ஜனநாயக அமைப்பு, இதில் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான உரிமை உண்டு. எனவே குழு விவாதம் பயனுள்ளதாக அமையக் குழுவின் விவாதப் பொருளிலும், வழிமுறையிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

---

### சிக்கன நாணயச் சங்கத்தின் விவாதத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியவை

- குழு விவாதத்தைத் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் வழி நடத்தி ஒருங்கிணைக்க வேண்டும்.
- அனைத்து உறுப்பினர்களிடமும் நல்ல முறையில் பழகி நல்லுறவை ஏற்படுத்த வேண்டும்.

- குழு விவாதத்திற்கு முன் அனைத்து உறுப்பினர்களும் கவனிக்க வசதியாக வட்டமாக அமர வேண்டும்.
- வழி நடத்துனர், புதிய கருத்தையோ,அல்லது செய்திகளையோ சொல்லும் போது உறுப்பினர்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி விளக்கமளிக்க வேண்டும்.
- கூட்ட விவாதத்தில் அனைவரையும் பங்கேற்கச் செய்தல், ஒதுங்கி இருக்கும் உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி கருத்துகளை வெளிப்படுத்தச் செய்தல் ஆகியனவற்றைச் செய்ய வேண்டும்.
- கூட்டங்களுக்கு ஒழுங்காக வராத உறுப்பினர்களைத் தவறாமல் கலந்து கொள்ள மற்ற உறுப்பினர்கள் ஊக்குவிக்க வேண்டும்.
- ஒருவர் பேசும் போது மற்றவர் கவனமாகக் கேட்க வேண்டும்.
- கூட்டத்தில் அதிகமான உறுப்பினர்கள் கூறும் ஒரே விதமான கருத்துகளைக் குழு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## சங்கத்தின் விவாதத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை

- குழு விவாதத்தின் போது, சிறுசிறு குழுவாகச் சேர்ந்து அவர்களுக்குள்ளேயே வேறு வெளிச் செய்திகளைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.
- ஒரு சில உறுப்பினர்களுக்கு மட்டும் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கும் வகையில் ஒருதலைப்பட்சமாகக் குழுவின் நோக்கங்களுக்கும் ஒற்றுமைக்கும் ஊறு விளைவிக்கும் படி செயல் படக்கூடாது.
- தங்கள் கருத்துகளைக் கூறும் உறுப்பினர்களைக் குறை கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.
- விவாதம் நடக்கும் போது உறுப்பினர்கள் இடை இடையே வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

## அடிப்படை விதிகள்

- சிக்கன நாணயச் சங்கம் குறைந்தது 10 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
- வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட அண்டை வீட்டுக் குடும்பங்கள் அனைத்தையும் இணைத்துச் சுய உதவிக்குழுக்களாக அமைத்துக் கொள்ளலாம்.
- சேமிப்பு பற்றியும், சமூக விழிப்புணர்வு பற்றியும், பெண்கள், முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாட வேண்டும்.

# 3. சங்கத்தின் பொது நிருவாகம்

சங்கத்தின் நிருவாகக்குழு, பொதுக்குழு, கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டியவைகள் குறித்த தரவுகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

## நிருவாகக்குழு

1. இத்திட்டத்தில் உள்ள உறுப்பினர்களிடையே நிருவாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்படும்.
2. அண்டை வீட்டுக் குழுவில் அடங்கியுள்ள சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரை துணைத் தலைவராகவும், இன்னொருவரை பொருளாளராகவும், இன்னொருவரை செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். இவர்கள் அனைவரும் சங்கத்தின் உறுப்பினர்களான பின் அவர்களுக்குள் நிருவாகக்குழுவின் தலைவர், துணைத்தலைவர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களைத் தேர்வு செய்வர்.
3. நிருவாகக் குழு ஆண்டுக்கு ஒரு முறை புதியதாய் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
4. குழுக்களுக்கு எவ்வளவு வட்டி செலுத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்வது, கடனுக்கு வட்டி அதிகரிப்பது அல்லது குறைப்பது, திரும்பச் செலுத்தப்படாத கடனுக்கு அபராதம் போடுவது போன்றவற்றையும் குழு முடிவு எடுக்கும். மற்றபடி அண்டை வீட்டுக்குழு எடுக்கும் முடிவே இறுதியானது.
5. சேமிப்பு வங்கியில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவர் பெயரில் கூட்டுக் கணக்கை ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டும்.
6. பொருளாளர் கூட்டுக் கணக்குத் தொடர்பான நடவடிக்கையைக் கண்காணிக்க வேண்டும்.

## பொதுக்குழுக் கூட்டம்

1. 15 நாட்களுக்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் குறைந்தபட்சம் 75 சதவீதம் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.
2. ஒவ்வொரு கூட்டமும் ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில் நேரத்தில் கூட்டப்பட வேண்டும். இக்கூட்டத்தில் சேமிப்பு, கடன் மற்றும் கணக்குத் தொடர்பான தரவுகள் விவாதிக்கப்பட வேண்டும்.
3. குழுவில் விவாதிக்கப்பட்டவைகள், கூட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை ஆகியன குறிப்பு நோட்டில் குறிக்கப்பட வேண்டும்.

## ஒவ்வொரு கூட்டத்திலும் கீழ்க்கண்ட விபரங்கள் விவாதிக்கப்பட வேண்டும்.

1. கடன் வழங்குவது பற்றித் தீர்மானித்தல். (கடன் வழங்குதல் மற்றும் கடனைத் திரும்பப் பெறுதல்).
2. சேமிப்புப் பணத்தை வசூலித்தல்.
3. சேமிப்பு நிதியைப் பாதுகாத்தல்.
4. கடன் வாங்கப் பொருளாதார மற்றும் முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
5. மொத்த வருமானம் மற்றும் செலவு.
6. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏதாவது மாற்றம் இருந்தால் அதைப்பற்றி விவாதித்தல்.
7. உள்ளூர் செய்தி மடல் (News Letter)முறையைச் செயல்படுத்தலாம். கூட்டம் நடக்கும் போது ஆரம்பத்தில் செய்தி மடலின் செய்திகளை வாசிக்க வேண்டும்.

8. இச்செய்தி மடலில் உறுப்பினர் கடன் பெற்று அதனால் செய்த சாதனைகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

9. இச்செய்தி மடலில் சேமிப்பு முன்னேற்றம் குழு வாரியாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

10. சேமிப்பை அதிகரிக்கவும்,ஊக்கப்படுத்தவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், கடன் வழங்கும் திட்டத்தைப் பற்றி அறியவும், விழிப்புணர்வு பெறவும் இச்செய்திமடல் உதவியாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு செய்தி மடலிலும் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அனைவரின் வறுமைக் காரணிகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

## குழு விதிமுறைகளை முடிவு செய்தல்

- குழு உறுப்பினர்கள் பட்டியல் தயார் செய்தல் (தலைவர், செயலாளர், பொருளாளர்)
- ஒவ்வொரு மாதமும் குழுக் கூட்டம் நடக்க வேண்டிய நாட்கள், இடம் பற்றி முடிவு செய்தல்.
- வாரச் சேமிப்பு, சந்தாத் தொகையை முடிவு செய்தல்.
- கூட்டத்திற்குத் தாமதமாக வருகை தந்தாலோ அல்லது கூட்டத்திற்கு வராமல் இருந்தாலோ விதிக்க வேண்டிய அபராதத் தொகையை முடிவு செய்தல்.
- சங்கக் கடன்களை அதிகபட்சம் எவ்வளவு அல்லது எத்தனை தவணைகளில் (மாதங்களில்) திரும்பக் கட்ட வேண்டும் என்பதை முடிவு செய்தல்.
- சங்கக் கடனுக்கு விதிக்கப்பட வேண்டிய வட்டி விகிதத்தை நிர்ணயித்தல்.

- வங்கிச் சேமிப்புக் கணக்கு தொடங்குவது குறித்து முடிவு செய்தல். குழுப்பெயரில் அருகிலுள்ள வங்கியில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம்.

- குழு உறுப்பினர் தவிர்க்க முடியாத காரணத்தால் விலகினால் சேமிப்பு,வட்டி போன்றவற்றைத் திரும்பத் தரப்படுவது குறித்து முடிவு செய்தல்.

மேற்கண்ட முடிவுகளைக் குழு விதிமுறைகளாகத் தீர்மானப் புத்தகத்தில் எழுதி வாசித்த பிறகு, அனைத்து உறுப்பினர்களின் கையெழுத்தையும் பெற வேண்டும். கூட்டத்திற்கு முன்பாகவோ, தீர்மானங்களை வாசிப்பதற்கு முன்பாகவோ, உறுப்பினர்களின் கையெழுத்தைப் பெறக்கூடாது.

# 4. சங்க நிதி நிருவாகம்

குழு நிதி நிருவாகத்தில் பணம் சேமிப்புக் குறித்த கருத்துகள் கீழே தரப்பட்டுள்ளன.

## வங்கிக் கணக்கு ஆரம்பித்தல்

1. நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும்.
2. உறுப்பினர் ஒவ்வொருவர் பெயருக்கும் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். அந்தச் சேமிப்புக்கணக்குப் புத்தகத்தில் சேமிப்புத்தொகை,வட்டி, எடுக்கப்பட்ட தொகை முதலியனவற்றைக் குறிப்பிட வேண்டும்.

## சேமிப்பு

1. ஒவ்வொரு வாரக் கூட்டத்திலும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் குழுக்கள் மாதம் ஒரு முறை சேமிப்புச் செய்தாலும், காலப் போக்கில் வாரச் சேமிப்புச் செய்வதற்கும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.
2. ஆறு மாதத்திற்கு ஒரு முறை சந்தாத் தொகையை அதிகப்படுத்த முடியுமா? என்று விவாதிக்கலாம். இப்படிச் சேமிப்பை உயர்த்தும் போது குழுவில் மிக ஏழையான உறுப்பினர்களின் கருத்தையும் கேட்டு முடிவு செய்ய வேண்டும்.
3. குறிப்பிட்ட தொகை சேமிப்புக்குப் பதிலாக விருப்பப்பட்ட தொகையைச் சேமிக்கும் பழக்கத்தைப் பின்பற்றுவதை விவாதித்து முடிவு செய்யலாம். இந்த முறையை ஏற்றுத் தீர்மானம் இயற்றும் பொழுது அதிக தொகையைச் சேமிக்கும் உறுப்பினர்களுக்கு எந்தச் சலுகையும் அளிக்கப்பட மாட்டாது என்று தீர்மானத்தில் கூற வேண்டும்.

4. குழுக் கூட்டத்தில், சேமிப்புச் செய்யத் தவறிய உறுப்பினர்களிடமிருந்து அபராதத் தொகை வசூல் செய்யலாம்.

5. நான்காம் ஆண்டு முதல், ஆண்டுக்கு ஒருமுறை குழுவின் நிதியில் சேர்ந்திருக்கும் வட்டியின் ஒரு பகுதியைக் குழு விரும்பினால் உறுப்பினர்களின் சேமிப்புத் தொகையின் விகிதத்தில் பிரித்து ஊக்கத்தொகையாக வழங்கலாம். குழுக் கணக்கு ஆண்டு தணிக்கை(ஆடிட்) செய்யும் போது, இதற்கான விழுக்காட்டை முடிவு செய்யலாம். குழுச் சேமிப்பினை ஒரு போதும் பிரித்து வழங்கக்கூடாது.

6. குழுவை விட்டுத் தவிர்க்க முடியாத காரணத்தினால் விலகிச் செல்லும் உறுப்பினர்களுக்குப் பொதுவாக அவர்களுடைய சேமிப்பு மட்டும் திருப்பித் தரப்படும். குழு விரும்பினால் சேமிப்புக்கு வட்டி அளிக்கலாம்.

7. ரொக்கப் புத்தகம், சேமிப்புப் பேரேடு, தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றில் சேமிப்பு பற்றிய விவரங்களைப் பொருளாளர் உடனுக்குடன் பதிவு செய்ய வேண்டும்.

8. உறுப்பினர்கள், படிக்காதவர்களாக இருந்தால் அவர்களின் குழந்தைகளிடமோ அல்லது மற்ற படித்தவர்களிடமோ அவர்களின் தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தைக் கொடுத்து, சேமிப்புக் குறித்த பதிவுகள் சரியாக எழுதப்பட்டுள்ளனவா? என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

9. கூட்ட முடிவில் உள்ள குழுப் பணத்தை, அதே நாளில் அல்லது அடுத்த நாளில் வங்கியில் குழுச் சேமிப்புக் கணக்கில் செலுத்த வேண்டும். இதற்குப் பிறகு தேவைப்படும் போது உறுப்பினருக்குச் சங்கக் கடன் தொகையை வங்கியிலிருந்து எடுக்கலாம்.

10. ஒவ்வொரு முறையும் சுழற்சி முறையில் ஓர் உறுப்பினர் வங்கிக்குச் சென்று பணம் செலுத்தும் முறையையும் ஊக்கப்படுத்தலாம். இது மிகப் பயனுள்ள பயிற்சி. யார் வேண்டுமானாலும் பணத்தை வங்கியில் செலுத்தலாம்.

11. குழுப் பெயரில் உள்ள வங்கிச் சேமிப்புக் கணக்கைத் தலைவர், செயலர் அல்லது இருவரும் கூட்டாகச் சேர்ந்து இயக்கலாம். பணம் எடுப்பதற்கு இவர்கள்தான் வங்கிக்குச் செல்ல வேண்டும்.
12. கையிருப்புப் பணமாக (ரூபாய் 100 முதல் ரூபாய் 500 வரை) உச்ச அளவாக எவ்வளவு வைத்துக்கொள்ளலாம்? யாரிடம் வைத்துக் கொள்ளலாம்? என்பதைக் குழு தீர்மானிக்கலாம். இப்பணத்தைச் சுழற்சி முறையில் உறுப்பினர்கள் வைத்துக் கொள்வதன் மூலம் முறைகேடுகளைத் தவிர்க்கலாம்.
13. வீண் பிரச்சனைகளுக்கு இடம் அளிக்காமல் உறுப்பினர்கள் அவர்களின் சந்தேகங்களை அவ்வப்போது கேட்டுத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

## செய்யக் கூடாதவை

1. உறுப்பினர்கள் தனியாக வந்து ஊக்குநரிடமோ? பிரதிநிதிகளிடமோ சேமிப்புச் சந்தா அல்லது கடன் பணத்தைக் கொடுக்கக்கூடாது. குழுக் கூட்டத்தில் மட்டுமே பணம் வாங்கவோ வழங்கவோ வேண்டும்.
2. உறுப்பினர்கள், விருப்பப்படி அதிக தொகை சேமிப்புச் செய்யும்போது, அதிக தொகை சேமிக்கும் உறுப்பினர்களுக்கு மட்டும் சிறப்புச் சலுகைகள் அல்லது தனி முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.
3. குறைந்தபட்சச் சேமிப்பை மிக ஏழையான உறுப்பினர்கள் நிதி நிலைமையைக் கருத்தில் கொள்ளாமல் முடிவு செய்யக் கூடாது.
4. திட்டப் பணியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனத்தின் களப்பணியாளர்கள் எக்காரணத்தைக் கொண்டும் குழுப் பணத்தைக் கையாளவோ எடுத்துச் செல்லவோ கூடாது. அதே போன்று குழுக் கணக்குகளையும் களப்பணியாளர்கள் கைவசம் வைத்து இருப்பதையோ, பராமரிப்பதையோ அறவே தவிர்க்க வேண்டும்.

5. ஆடம்பரச் செலவுகளுக்கும், நன்கொடை கொடுக்கவும் சங்கப் பணம் பயன்படுத்தக்கூடாது.

6. சேமிப்பு வசூல் தொகையை வங்கியில் செலுத்தாமல் குழுக் கூட்டத்திலே சங்கக் கடனாக வழங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மாறாக வங்கியில் சேமிப்பைச் செலுத்திய பிறகு காசோலை மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சங்கக் கடன் கொடுக்கப்படும் தொகையை வங்கியிலிருந்து எடுக்க வேண்டும்.

## சேமிப்பு விதிகள்

1. ஒவ்வோர் உறுப்பினரும் வாரம் குறைந்த பட்சம் 25 ரூபாயினைச் சேமிப்புத் தொகையாகச் செலுத்தி முதலீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும்.
2. சேமிப்புத் தொகைக்கு வட்டியாக 8% வரை அளிக்கலாம்.
3. வட்டியை மாதத்திற்கு ஒருமுறை கணக்கிட்டுச் சம்பந்தப்பட்டவரின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.
4. சேமிப்புத் தொகையில் 50 சதவீதம் திரும்பப் பெறலாம்.கடன் பாக்கி இருக்கும் பட்சத்தில் இவ்வாறு பெற இயலாது.

## சேமித்த பணத்தைத் திரும்பப் பெறும் விதிகள்

1. ஏதாவது ஒரு காரணத்திற்காகக் குழுவில் இருந்து உறுப்பினர் என்ற தகுதியிலிருந்து விலகும் பட்சத்தில் சேமித்த தொகையை வட்டியுடன் திரும்பக் கொடுக்க வேண்டும். 2 சதவீதம் தொகையை நிருவாகப் பணிக்காகப் (Service Charge) பிடித்துக் கொள்ளலாம்.

2. நிலையான சேமிப்புப் பணத்தை, உறுப்பினர் பதவியிலிருந்து விலகும்போது திரும்பச் செலுத்தப்படும்.ஆனால் இடையே சேமிக்கும் பணத்தை உறுப்பினர்கள் அவசரத் தேவைக்குக் கேட்கும் போதும் கடனாக வழங்கப்படும்.

# 5. நிதி நிருவாகம் - சங்கத்திலிருந்து உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குதல்

நிதி நிருவாகம் செய்தலில் சங்கத்திலிருந்து உறுப்பினர்கள்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் அவற்றைத் திரும்பப்பெறுதல் போன்ற பொதுவான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**சங்கக்கடன்**

1. குழு ஆரம்பித்த பிறகு இரண்டு அல்லது மூன்று மாதங்களான பிறகு சங்கச்சேமிப்பிலிருந்து சிறுதொகையாகச் சங்கக்கடன் வழங்கப்படலாம். தேவையுள்ள உறுப்பினர்களுக்குச் சங்கக்கடன் வழங்காமல் வங்கியில் பணத்தை வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்.
2. சங்கக் கடன் அளவு, திருப்பிச் செலுத்தும் தவணை முறை ஆகியவற்றை ஒவ்வொரு குழுவும் அவர்கள் நிதி வசதி, வளர்ச்சி சூழ்நிலைகளுக்கேற்ப நிர்ணயித்துக் கொள்ளலாம்.
3. ஆரம்ப காலங்களில் கொடுக்கப்படும் சங்கக் கடன்கள் சிறு கடன்களாகவும்(ரூ.200 முதல் ரூ.500 வரை) குறைந்தகாலத்தில் திருப்பிச் செலுத்தப்படும் கடன்களாகவும் (3 மாதம் முதல் 6 மாத தவணை) வழங்கலாம். காலப்போக்கில் குழுவே அதிகபட்ச கடனை உயர்த்தத் தீர்மானிக்கலாம்.
4. உறுப்பினர்களின் அவசரச் செலவு, மருத்துவச் செலவு, கல்விச் செலவுகள், தொழில்தொடங்க மூலதனம் ஆகிய தேவைகளுக்குச் சங்கக் கடன் வழங்கலாம்.
5. பல உறுப்பினர்கள் சங்கக் கடன்கள் கேட்கும் நிலையில் மருத்துவம்,கல்வி,தொழில் மூலதனம், அவசரத் தேவை ஆகியவற்றில் எதற்கு முன்னுரிமை அளிப்பது என்பதை கலந்துரையாடி கடன் அளிக்கலாம்.

6. சங்கக் கடனுக்காக வட்டி விகிதத்தையும் குழுவே தீர்மானிக்கலாம். பொதுவாக முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் சென்ற பின், தேவைப்பட்டால், வட்டி விகிதத்தைக் குறைக்கக் குழு முடிவு செய்யலாம். இத்தகைய குறைப்பு, வருமானம் ஈட்டும் தொழில் செய்யப் பெருந்தொகையைச் சங்கக் கடனாகப் பெற உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்கும்.

7. சங்கக் கடன் அனுமதி விவரமாகத் தீர்மானப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். (சங்கக்கடன் பெறுபவரின் பெயர்,கடன் பெறுவதற்கான காரணம், திருப்பிச்செலுத்தும் காலம், வட்டி விகிதம் ஆகியவை).

8. சில அவசரத் தேவைகளுக்குச் சங்கக்கடன் வழங்க ஏதுவாகச் சிறப்புக்குழுக் கூட்டங்களையும் கூட்டலாம்.

9. சங்கக் கடன் வழங்குதல், தவணைத்தொகை வசூலித்தல், ஆகியவை குழுக் கூட்டத்தில் மட்டும் தான் நடைபெற வேண்டும்.

10. சங்கக்கடன் பெற்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் அசலின் தவணைத்தொகையும், வட்டியையும், குழுக் கூட்டத்தில் செலுத்தி சான்றிதழ்ப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. சங்கக்கடன் வழங்கல், மற்றும் வசூலை ரொக்கப் புத்தகத்திலும் சங்கக்கடன் பேரேட்டிலும் ஊக்குநர் உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும். ஆனால், பிரதிநிதிகள் மட்டுமே பணத்தைக் கையாள வேண்டும். இதன் மூலம் குழுவில் தவறுகள் நடப்பதற்கான வாய்ப்புக் கணிசமாகக் குறைகிறது.

12. குழுக் கூட்டத்திலேயே ஒவ்வொரு உறுப்பினரின் அன்றைய சங்கக் கடன் நிலுவையை வாசித்து, அனைவரும் தெரிந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

13. ஓர் உறுப்பினர் சங்கக் கடனைக் கட்டத் தவறினாலும், அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து சங்கக் கடனை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க ஒத்துழைப்புத் தர வேண்டும்.

14. கடன்கள், சங்கக் கடனாக இருந்தாலும் வங்கிக் கடனாக இருந்தாலும் கண்ணியமாகத் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் நிதியும் வளமும் அனைவருக்கும் கிடைக்கும். பெருகும்.

## செய்யக்கூடாதவை

1. குழு நிதியைப் பயன்படுத்தாமல் வங்கியிலேயே சேமிப்பாகவோ வைப்பு நிதியாகவோ வைப்பது முற்றிலும் தவிர்க்க வேண்டும். அவசரக் கடன் தேவைப்படும் உறுப்பினர்களுக்கு உடனுக்குடன் கடன் வழங்கப்பட வேண்டும். குழு நிதியை முழுமையாகப் பயன்படுத்தாமல் குழுக் கூட்டமைப்பிலோ, தொண்டு நிறுவனத்திடமோ, வங்கியிலோ கடன் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

3. ஓர் உறுப்பினருக்கு, ஒரு சங்கக் கடன் நிலுவையில் இருக்கும் பட்சத்தில், அதை முழுமையாகத் திரும்பக் கட்டும் வரையில் குழு பொதுவாக அடுத்தக்கடன் பெற அனுமதிக்கக்கூடாது.

4. சங்க உறுப்பினராக இல்லாத நபர்களுக்குக் கடன் அல்லது நன்கொடை கண்டிப்பாக வழங்கக்கூடாது. இதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

## கடன் வழங்கும் விதிகள்

1. குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கடன் வழங்கப்படும். கடன் வழங்குவதில் முதலில், அதிக வறுமைக்காரணிகள் உடையவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

2. கடன்,அவசரத்தேவை மற்றும் முக்கியத்தேவைகளுக்கு வழங்கப்படவேண்டும்.

3. வருவாய் தரக்கூடிய தொழில்கள் ஆரம்பிக்க முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

4. 6 மாதம் சேமிப்புப்பணம் செலுத்திய பின்னர்தான் குழுவின் மூலம் கடன் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

5. கடன் பாக்கி செலுத்தத் தவறியவர்களுக்கு மீண்டும் கடன் வழங்கப்பட மாட்டாது.

6. மொத்த சேமிப்புத் தொகையின் 50 சதவீதம் வரை தான் கடன் வழங்கப்பட வேண்டும்.

7. அன்றாடத் தேவைகளுக்குப் பெறப்படும் கடன் தொகை அளவு தேவைகளுக்கேற்ப குழுவினரால் நிருவாகம் செய்யப்படும்.

8. ஆரம்பத்தில் சிறு தொகையே கடனாக வழங்கப்படும். கடன் தொகை திரும்பச் செலுத்தப்பட்ட பின்னர்க் கடன் தொகையை அதிகப்படுத்தலாம்.

9. கடன்களுக்கு12 சதவீதம் வட்டியாக வசூலிக்கலாம். அதாவது ரூ.100 கடன் தொகைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1/-வட்டியாக வசூலிக்கலாம்.

10. அவசரத் தேவைகளுக்குக் கடன் வேண்டும் என்றால் அவர்கள் சேமித்த பணத்திலிருந்து50 சதவீதம் கடனாக 12 சதவீதம் வட்டியுடன் கொடுக்கலாம்.

## கடனைத் திரும்பப் பெறும் விதிகள்

1. கடன் தொகையை 6 மாதங்களுக்குள் திரும்பச் செலுத்தவேண்டும்.

2. கால தாமதமாகச் செலுத்தப்படும் கடன் தொகைக்கு அபராதம் ஒரு மாதத்திற்கு ரூ.100/-க்குக் கூடுதலாக ரூ.1/-வீதம் வசூலிக்கலாம்.

3. கடன் தொகையை வார அல்லது மாத அடிப்படையில் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் வசூலிக்கலாம்.

## பொதுநிதி

சங்கக் கடன் மேல் வசூலிக்கப்படும் வட்டி மகளிர்குழுவின் முக்கிய வருமானமாகும். அதைத் தவிர,சுய சார்பு நிலையை அடைய, பிற வழிகளிலும் சங்க வருவாயை அதிகரிக்க முயற்சி எடுக்க வேண்டும். உறுப்பினர்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கள் செய்தால், குழு சேமிப்புத் தொகையை அதிகரிக்கலாம். காலப் போக்கில் ஒவ்வொரு குழுவும் பல்வேறு செலவுகளை அதன் நிதியிலிருந்தே கீழே குறிப்பிட்டுள்ள முறையில் சந்திக்க வேண்டும்.

## குழுப் பராமரிப்பு நிதி

***மாதச் சந்தா***

வங்கிக்குச் செல்லும் போக்குவரத்துச் செலவு மற்றும் சிறு நிருவாகச் செலவுகளை ஈடுகட்ட ஒவ்வோர் உறுப்பினரிடமும் குறைந்த மாதச் சந்தாவாக ரூ. 2 வசூல் செய்யலாம்.

இதைக் குழு தான் நிர்ணயம் செய்ய வேண்டும்.

**சேவைக் கட்டணம்**

குழுச் செலவுகளை எதிர்நோக்கவும் குழு நிதியைப்பெருக்கவும் சுய உதவிக்குழு வாயிலாக வங்கி மற்றும் பிற நிறுவனக் கடன்களுக்கு வங்கி வட்டியைவிட 2% முதல் 12% வரை அதிக வட்டி கணக்கிட்டுக், கடன் பெறும் உறுப்பினர்களிடமிருந்து வசூல் செய்யலாம்.

**அபராதம்**

குழு விரும்பினால், கூட்டத்திற்கு மற்றும் பயிற்சிகளுக்குத் தாமதாக வருபவர்கள் மற்றும் வராதவர்கள், கடன் தவணை கட்டத் தவறியவர்கள் ஆகியோரிடம் அபராதம் வசூலிக்கத் தீர்மானிக்கலாம். இந்த அபராதத் தொகையைக் குழுவின் முதல் கூட்டத்திலேயே தீர்மானிக்க வேண்டும்.

*திட்ட உதவி*

திட்ட நிதியிலிருந்து, குழுப் பராமரிப்புக்கென மூன்றாண்டு காலத்திற்கு நிதியுதவி அளிக்கப்படும். இந்த உதவிப் பணம் குழுவிற்கு வழங்கப்படும். ஒன்றிய அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் (பி.எல்.சி.சி.) கலந்து கொள்ளவும், குழு ஆண்டு கணக்குத் தணிக்கை செய்யவும், ஊக்குநருக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கும், ஏனைய செலவுகளுக்கும் பயன்படுத்த வேண்டும். மூன்று வருடங்களுக்குப் பிறகு, எவ்வித உதவியும் எதிர்பார்க்காமல் அனைத்துச் செலவுகளையும் சந்தித்துத் தொடர்ந்து செயல்பட, எல்லாக் குழுக்களும் ஆரம்பத்திலிருந்தே அவைகளைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

## பொதுச் செலவுகள்

குழுச் செயல்பாடு சம்பந்தப்பட்ட பொதுச் செலவுகளுக்கான வரம்புகளைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கலாம். குழுச் செலவுகளுக்குச் செலவுச் சீட்டு, பட்டியல்கள் தணிக்கைக்காகப் பராமரிக்கப்பட வேண்டும். அனைத்துச் செலவுகளும் உரிய பதிவேடுகளில் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

# 6. குழுக் கூட்டங்களில் தேவைப்படும் ஆற்றல் மிக்க கேள்விகள்

தொண்டு நிறுவனக் களப் பணியாளர்களும் திட்டப் பணியாளர்களும் ஒவ்வொரு குழுக் கூட்டங்களில் கீழ்க்காணும் கேள்விகளை எழுப்பிக் குழுக்களின் சிந்தனையைத் தூண்டி விட வேண்டும். சிந்தனைகளும் விவாதங்களும் முடிவுகளாக மாறிச் செயல் வடிவம் பெற வேண்டும்.

1. ஏன் வாரச் சேமிப்புச் செய்யத் தொடங்கவில்லை?
2. அடிக்கடி குழுக் கூட்டம் நடத்துவதன் அவசியம் என்ன?
3. 6 மாதத்திற்கொருமுறை சேமிப்பை அதிகரிக்கலாமா?
4. சேமிப்புத் தொகையைக் கூட்ட முடியாமல் உறுப்பினர்கள் நீங்கிவிட்டார்களா?
5. குழுச் சேமிப்பு செலுத்துவதற்கு அல்லது கடனைத் திருப்பிக் கட்ட ஏதேனும் உறுப்பினர் வட்டிக் காரனிடம், எவ்வளவு வட்டிக்குக் கடன் வாங்கினார்? அதன் விளைவு என்ன?
8. கடந்த கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனரா? இல்லையெனில் கலந்து கொள்ளாததற்கு என்ன காரணம்?
9. அனைத்து உறுப்பினர்களும் பேசுகின்றனரா? அவர்களைப் பங்கேற்கச் செய்வது எப்படி?
10. வங்கிக்கு யார் யார் செல்கின்றனர்? சுழற்சி முறையில் அனைத்து உறுப்பினர்களும் செல்வதினால் என்ன பயன் கிடைக்கிறது?.
11. ஊக்குநர் - பிரதிநிதிகள் தங்கள் பொறுப்புக்களைத் தெரிந்துகொண்டு உள்ளனரா? பொறுப்புக்களைப் பட்டியலிடச் செய்யலாம். உறுப்பினர்களின் பொறுப்பு என்ன?

12. குழுக் கூட்டங்களை அவர்களே நடத்தும் திறமை உள்ளதா?

13. பிரதிநிதிகள் சுழற்சி முறையில் ஆண்டிற்கொருமுறை தேர்வு செய்யப்படுகின்றனரா? அதன் பயன் என்ன?

14. வருடாந்திர செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா? அதன் செயலாக்கம் எப்படி உள்ளது? விவாதிக்கலாம்.

15. குழுக் கணக்குகளை யார் எழுதுகின்றனர்? இரட்டைப் பதிவு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதா? கணக்குப் புத்தகங்களைச் சரிபார்க்கலாம்.

16. குழு உறுப்பினர்கள் நிதி நிலைமையைத் தெரிந்து வைத்துள்ளனரா? தெரியவில்லை என்றால், அதற்கான காரணம் என்ன? அதனை எப்படித் திருத்துவது. 'குழு' ஒளிவு மறைவின்றிச் செயல்படுவதன் அவசியத்தை விவாதிக்கலாம்.

17. சேமிப்புப் பேரேட்டைப் பார்க்கவும். சேமிப்புத் தவணை தவறாமல் கட்டப்பட்டுள்ளதா?

18. கடன் பேரேட்டைப் பார்க்கவும். கடன் தவணை தவறாமல் கட்டப்பட்டுள்ளதா? வாங்கிய கடன் நீண்ட கால நிலுவையில் உள்ளதா? இல்லையெனில் காரணம் என்ன? விவாதிக்கலாம். மாதம் ஒருமுறை கணக்குப் புத்தகங்கள் சரிபார்க்கப்படுகின்றனவா?

19. ஓராண்டிற்கு மேலான குழுவென்றால், குழுக் கணக்கு, தணிக்கை செய்யப்பட்டுள்ளதா? இல்லையெனில் தணிக்கைக்கு ஏற்பாடு செய்யலாம்.

20. குழு உறுப்பினர் பயிற்சியில் கற்றுக் கொண்டது என்ன? கற்றது செயல்படுத்தப்பட்டதா? விவாதிக்கலாம்.

21. பயிற்சியில் கற்றுக்கொண்டது உறுப்பினர்களிடம் பொறுப்பாளரால் தெரிவிக்கப்பட்டதா?

22. பகுதி வளர்ச்சிக்காகக் குழு என்ன செய்துள்ளது? என்ன செய்யலாம்?

23. சுத்தம், சுகாதாரம், ஆகியவற்றிற்குக் குழு செய்த பணிகள்? குழு உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர்?

24. குழு உறுப்பினர்கள் வளர்ச்சிக்காக ஏதேனும் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனரா?

25. தொழில் செய்வதற்குக் குழுவிடம் முதலீடு உள்ளதா? இல்லையெனில் எங்கிருந்து கிடைக்கும்?.

26. குழு உறுப்பினர்கள் செய்யும் தொழிலுக்கு வரவு செலவுக்கணக்கு வைத்துள்ளனரா? கணக்கு வைப்பதன் அவசியத்தை எடுத்துக் கூறலாம்.

27. குழுவில் சேர்ந்த பிறகும் வட்டிக் கடையிலும், சொந்தக்காரர்களிடமும் உறுப்பினர்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்குகின்றனரா?

28. வங்கி, திட்ட அலுவலகம், தொண்டு நிறுவனம், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு எல்லா உறுப்பினர்களும் சென்றுள்ளனரா? செல்ல வேண்டியதின் அவசியம் என்ன?

29. அனைத்து உறுப்பினர்களும் கையெழுத்துப் போடுகின்றனரா? அதன் அவசியத்தை விளக்கலாம்.

30. உறுப்பினர்கள் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்கூடம் செல்கின்றனரா? பெண் குழந்தைகளைக் குறைந்தபட்சம் +2 வரையிலாவது படிக்க வைக்கின்றனரா?

31. இளம் வயது திருமணம் தடுக்கப்பட்டுள்ளதா? விவாதம்(அனுபவ பகிர்வு)

32. வரதட்சணைக் கொடுமை தடுக்கப்பட்டுள்ளதா? என்ன மேல் நடவடிக்கை? விவாதிக்கலாம். (அனுபவப் பகிர்வு)

33. பெண் சிசுவதை தடுக்கப்பட்டுள்ளதா? விவாதம்.

34. கள்ளச் சாராயத்தை ஒழிக்க அனைத்துக் குழுக்களும் ஒற்றுமையாக

என்ன நடவடிக்கை எடுத்துள்ளன? விவாதம். உண்மைச் சம்பவங்களைக் கூறலாம்.

35. குழந்தைத் தொழில் முறையை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவாதம். உறுப்பினர் குழந்தைகள் (14 வயதுக்குட்பட்டவர்கள்) எவரேனும் தொழிலில் ஈடுபட்டுள்ளனரா?

35. குழு உறுப்பினர்கள் அனைவரும் குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்துள்ளனரா? இல்லையெனில் அதன் அவசியத்தை விளக்கலாம்.

37. எத்தனை உறுப்பினர்களுக்கு சைக்கிள் ஓட்டத் தெரியும்? தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குக் கற்றுக் கொடுக்கலாமா? அதன் பயன் என்ன?

38. உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் பங்கேற்றுப் பள்ளிச் சீரமைப்பிற்காக நடவடிக்கை எடுத்துள்ளனரா? இல்லையெனில் அதன் அவசியத்தை விவாதிக்கலாம்.

39. உறுப்பினர்கள் வீட்டில் குழுக் கூட்டத்திற்கு வருவதற்கும், பிறந்த வீட்டிற்குச் செல்வதற்கும், அன்றாடச் செலவுகளை மேற்கொள்வதற்கும் சுதந்திரம் உள்ளதா?

40 பெண்களுக்கு ஆண்களைவிடக் குறைவான கூலி கொடுக்கப் படுகிறதா? ஆம் எனில், நியாயமான கூலி கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கலாம். கூட்டு முயற்சி எடுக்கலாமா?

41. உறுப்பினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் இடைத்தரகர் மூலமாக விற்கப்படுகின்றனவா? அதனைத் தவிர்த்து நேரடியாகச் சந்தையில் விற்று நியாய விலை கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம்?

42. மிக அவசரமான தேவை ஏற்படும்போது உறுப்பினருக்குக் குழு உதவுகிறதா? மாறாக மறுபடியும் வட்டிக் கடைக் காரனிடம் செல்ல

வேண்டிய அவசியம் ஏற்படுகிறதா? இதைத் தவிர்க்க என்ன செய்யலாம்? வாரக்கூட்டம் போடலாமா?

43. குழுவின் செயல்பாடு ஜனநாயக முறையில் அமைந்துள்ளதா? தனிநபர் ஆதிக்கம் உள்ளதா? இருப்பின் அதை எப்படித் தவிர்க்கலாம்.?

44. குழுவின் நிர்வாகப் பொறுப்பு பகிர்ந்தளிக்கப்படுகிறதா? குழுவில் துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா? பயன்களை விவாதிக்கலாம்.

45. சேமிப்புத் தொகையைக் கட்ட முடியாமல் மிக ஏழையான உறுப்பினர் குழுவை விட்டு விலகியுள்ளாரா? சேமிப்புத் தொகை மிக ஏழ்மையான உறுப்பினரைக் கேட்டு முடிவு செய்யப்படுகிறதா?

46. சொத்துகள் உறுப்பினர்கள் பெயரில் வாங்கப் படுகின்றனவா? அல்லது கணவருடன் கூட்டாகப் பதிவு செய்யப் படுகிறதா? உறுப்பினர்கள் உரிமை என்ன? விவாதிக்கலாம்.

# 7. பதிவேடுகள்

ஒவ்வொரு சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கமும் கீழ்க்காணும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். அதற்கான பயிற்சி சமுதாய அமைப்பாளரால் கொடுக்கப்படும்.

- வருகைப்பதிவேடு
- குழுத் தீர்மானப் பதிவேடு
- சேமிப்புப் பதிவேடு
- கடன் பேரேடு
- ரொக்கப் பேரேடு
- தனிநபர் சேமிப்புக் கணக்குப் புத்தகம்
- குழுக் கடிதக் கோப்பு
- பார்வையாளர் புத்தகம்

## கவனத்தில் கொள்ள வேண்டியவை

திட்டப்பணியாளர்கள் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது வங்கிக் கணக்குப் புத்தகத்தைப் பதிவேடுகளுடன் சரிபார்க்க வேண்டும். வங்கியில் குழுவின் சேமிப்புப் பயன்படுத்தப்படாமல் தேக்க நிலை அடைந்துள்ளதா? என்பதைச் சரி பார்க்க வேண்டும்.

வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட பணத்திற்குத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதா?பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா? குழு உறுப்பினர்களுக்குத் தெரியுமா? இதைக் கவனிக்க வேண்டும்.

குழுக் கூட்டநாளையும், வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தில் குழுச் சேமிப்புப் பணம் செலுத்திய நாளையும் சரி பார்க்கலாம். வசூல் தொகை உடனுக்குடன் செலுத்தப்பட்டுள்ளதா? தாமதம் உள்ளதா? காரணம் என்ன?

## தீர்மானப் புத்தகம்

ஒவ்வொரு சங்கக்கூட்டம் நடைபெற்ற நாளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், குழுவின் அன்றைய கூட்ட நடவடிக்கைகள் இதில் பதிவு செய்யப்படும்.

தீர்மானப் புத்தகத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் கையெழுத்துப் பெறப்பட வேண்டும்.

தீர்மானப் புத்தகத்தில் உறுப்பினர்கள் கையொப்பம் பொதுவாக பெறப்படுகிறது. எனவே குழுத் தீர்மானங்கள் ஏற்கப்பட்டு எழுதப்பட்டவுடன் அதனை ஒட்டியே தலைவர்,செயலாளர், பொருளாளர் கையெழுத்திட வேண்டும்.

# சேமிப்பு மற்றும் சிக்கன நாணயச் சங்கம்

## சங்கத் தீர்மானப்பதிவேடு

கூட்ட நாள் : 25-12-2002 சென்ற கூட்டம் முடிய சேமிப்பு ரூ.20,000/-

உறுப்பினர் எண்ணிக்கை : நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ.5,000/-

வருகை : மொத்தச் சேமிப்பு ரூ.25,000/-

| தீர்மானம் எண். | பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 1. | கூட்டத் தொடக்கம் | இன்று திருமதி. வள்ளியைத் தவிர அனைவரும் சரியாக 7.30 மணிக்கு வருகை தந்தனர் |
| 2. | சேமிப்பு | வார சேமிப்புத் தொகை ரூ.25 வீதம் ரூ. 500 வசூல் செய்யப்பட்டது. வெளியூர் சென்றுள்ள திருமதி வள்ளி அவரது மகள் மூலமாக ரூ. 25 கொடுத்தனுப்பி உள்ளார். |
| 3. | சங்கக் கடன் வழங்குதல் | திருமதி. ராணிக்கு ரூ.500 வழங்க முடிவு செய்யப்பட்டது. |
| 4. | வங்கிக்குச் செல்லுதல் | திருமதி. சொர்ணத்தை வங்கிக்கு அனுப்பக் குழு தீர்மானிக்கிறது. |

அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம்

## மாதிரி ரொக்க ரசீது

# ரோஜா மகளிர் மன்றம்

*கக்கன் நகர்*

எண் :1 நாள் :7-11- 2002

உறுப்பினர் பெயர் : **திருமதி பூங்கோதை**

| விவரம் | தொகை ரூ. | பை. |
|---|---|---|
| நவம்பர் 2002 மாதச் சந்தா... ... ... | 02 | 00 |
| சேமிப்பு ... ... ... | 25 | 00 |
| சங்கக் கடன் செலுத்தியது ... ... ... | 250 | 00 |
| வட்டி செலுத்தியது ... ... ... | 50 | 00 |
| இதர வகைகள் ... ... ... | | |
| மொத்தம் | 327 | 00 |

(ரூபாய் முன்னூற்றி இருபத்தேழு மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது)

பணம் செலுத்துபவர் கையொப்பம் தலைவர்/ பொருளாளர் கையொப்பம்

## மாதிரி ரொக்க ரசீது

### ரோஜா மகளிர் மன்றம்

*கக்கன் நகர்*

எண் : 2 நாள் : 7-11-2002

உறுப்பினர் பெயர் : **திருமதி ஜோதி**

| விவரம் | தொகை ரூ. | பை. |
|---|---|---|
| நவம்பர் 2002 மாதச் சந்தா ... ... ... | 02 | 00 |
| சேமிப்பு ... ... ... | 25 | 00 |
| சங்கக் கடன் செலுத்தியது ... ... ... | 100 | 00 |
| வட்டி ... ... ... | 10 | 00 |
| இதர வகைகள் ... ... ... | - | - |
| மொத்தம் | 137 | 00 |

(ரூபாய் நூற்றி முப்பத்தேழு மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது)

பணம் செலுத்துபவர் கையொப்பம் தலைவர்/ பொருளாளர் கையொப்பம்

# ரோஜா மகளிர் மன்றம்

## ரொக்கப் பதிவேடு

| வ. எண். | உறுப்பினர் பெயர் | சேமிப்பு | சந்தா | சங்கக் கடன் அசல் | சங்கக் கடன் வட்டி | இதர வரவு | மொத்த வரவு | சங்கக் கடன் | இதரச் செலவு | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பூங்கோதை | 25 | 2 | 250 | 50 | -- | 327 | | | |
| 2. | ஜோதி | 25 | 2 | 250 | 10 | -- | 327 | | | |
| 3. | | | | | | | | | | |
| 4. | | | | | | | | | | |
| 5. | | | | | | | | | | |
| 6. | | | | | | | | | | |
| 7. | | | | | | | | | | |
| 8. | | | | | | | | | | |
| 9. | | | | | | | | | | |
| 10. | | | | | | | | | | |
| 11. | | | | | | | | | | |
| 12. | | | | | | | | | | |
| 13. | | | | | | | | | | |
| 14. | | | | | | | | | | |
| 15. | | | | | | | | | | |
| 16. | | | | | | | | | | |
| 17. | | | | | | | | | | |
| 18. | | | | | | | | | | |
| 19. | முனுசாமி | 25 | 2 | | | 27 | | | | |
| 20. | மொத்தம் | 500 | 40 | 300 | 60 | | | | | |

| | |
|---|---|
| ஆரம்ப ரொக்க இருப்பு | ரூ. 200 |
| மொத்த ரொக்க வரவு | ரூ. 500 |
| மொத்த வரவு | ரூ. 700 |
| செலவு | ரூ. 200 |
| கையிருப்பு | ரூ. 500 |

## பணம் பட்டுவாடா வவுச்சர் (மாதிரி)

| |
|---|
| **ரோஜா மகளிர் மன்றம்** |
| *கக்கன் நகர்* |
| *உறுப்பினர் பெயர் : திருமதி . பழனியம்மாள்* *நாள் 7-11-2002* |
| **SJSRY** - *சுழல் நிதிக் கடன்* |
| *மகள் படிப்புச் செலவிற்காக ரூ. 1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) மன்றத்திலிருந்து வழங்கப்பட்டது.* |
| **Revenue Stamp** |
| தலைவர், பொருளாளர் கையொப்பம் — பணம் பெறுபவர் கையொப்பம் |

## சேமிப்புப் பேரேடு

ஒவ்வோர் உறுப்பினரும், ஒவ்வொரு சங்கக் கூட்டத்தில் கட்டிய சேமிப்பையும், சந்தாவையும், அவரின் சேமிப்புக் கணக்குப் பேரேடு பக்கத்தில் நடப்புக் கூட்டச் சேமிப்புப் பகுதியில் நாளினைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

முந்தைய மொத்த சேமிப்புடன் நடப்புக் கூட்டச் சேமிப்பைக் கூட்டிவரும் தொகையை மொத்த சேமிப்புப் பகுதியில் செலுத்த வேண்டும்.

மாதிரிப் பதிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## சேமிப்புப் பேரேடு

உறுப்பினர் பெயர் : பூங்கோதை — உறுப்பினர் எண் 1

| *நாள்* | *நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ* | *மொத்தச் சேமிப்பு ரூ* | *சந்தா ரூ* | *தலைவர், பொருளாளர் கையொப்பம்* |
|---|---|---|---|---|
| | *முன் கணக்கு* | *975* | | |
| *31-10-2002* | *25* | *1000* | *2* | |
| *15-11-2002* | *25* | *1025* | *2* | |

| உறுப்பினர் பெயர் : ஜோதி | | | | உறுப்பினர் எண் 1 |
|---|---|---|---|---|
| நாள் | நடப்புக் கூட்டச் சேமிப்பு ரூ | மொத்தச் சேமிப்பு ரூ | சந்தா ரூ | தலைவர், பொருளாளர் கையொப்பம் |
| | முன் கணக்கு | 975 | | |
| 31-10-2002 | 25 | 1000 | 2 | |
| 15-11-2002 | 25 | 1025 | 2 | |

## கடன் பேரேடு

* தனிநபர் ரசீதை அடிப்படையாக வைத்து, உறுப்பினர் கட்டிய சங்கக் கடன் அசலையும் வட்டி வசூலையும் அவரின் கடன் பேரேடு புத்தகத்தில் உரிய பகுதியில் எடுத்து எழுத வேண்டும்.
* கடன் கொடுக்கும் போது கடன் தொகைப் பகுதியில் பதிவு செய்ய வேண்டும்.
* கடன் தொகை, நோக்கம்,தவணை, வட்டி விகிதம் ஆகியவற்றை ஒவ்வொரு கணக்கிலும் குறிப்பிட வேண்டும்.
* கடன் தொகையிலிருந்து அதில் திருப்பிச் செலுத்தியதைக் கழித்து மீதிக் கடன் நிலுவையைக் குறிப்பிட வேண்டும்
* கடன் முடிக்கப் பெறும்போது கடன் வழங்கிய தொகை மொத்தமும் கடன் அசல் திரும்பச் செலுத்திய மொத்தத்தையும் தனியாகக்கூட்டி இரண்டும் சமமாக உள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.

## மாதிரிக் கடன் பேரேடு (Loan Ledger)

கடன் பேரேடு எண் :
உறுப்பினர் பெயர் : பூங்கோதை — உறுப்பினர் எண் 11

| நாள் | ரசீது எண் | விவரம் | கடன் தொகை | தவணை | வட்டி | திரும்பச் செலுத்தியது | | கடன் நிலுவை | தலைவர் பொருளாளர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அசல் | வட்டி | | |
| 7-10-2002 | 10 | மருத்துவக்கடன் | 2500 | 10 | 2% | | | 2500 | |
| 7-11-2002 | 11 | | | | | 250 | 50 | 2250 | |
| | | | | | | | | | |

# பொதுப் பேரேடு

**பொதுப் பேரேட்டில் கீழ்க்காணும் தலைப்புகளில் தனித்தனிப் பக்கங்களை ஒதுக்க வேண்டும்.**

1. சேமிப்பு
2. சந்தா
3. சங்கக் கடன் கொடுத்தது - சங்கக் கடன் வசூல்
4. அபராதம், இதரச் செலவுகள்
5. சேவைக் கட்டணம்
6. பயணச்செலவு
7. குழுப் பாதுகாப்பு நிதி
8. SJSRY Revolving Fund

## தனிநபர் சேமிப்புக் கடன் புத்தகம்

1. இப்புத்தகம் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்.
2. இப்புத்தகம் இரண்டு பகுதிகளாக உள்ளன. முதல் பகுதி சேமிப்புப் பகுதி. இரண்டாவது கடன் பகுதி
3. இப்புத்தகத்தின் மூலம் உறுப்பினர்கள், அவர்கள் இதுவரை எவ்வளவு மொத்தம் சேமிப்புச் செய்துள்ளார்கள்? என்பதையும், வாங்கிய கடனில் எவ்வளவு திருப்பிச் செலுத்தியுள்ளார்கள்? என்பதையும், அவர்கள் பெயரில் மீதிக் கடன் நிலுவை எவ்வளவு உள்ளது? என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

## சேமிப்புப் பகுதிப் பதிவுகள்

ஒவ்வோர் உறுப்பினரும் ஒவ்வொரு குழுக் கூட்டத்தில் கட்டிய

சேமிப்பு அவரின் தனிநபர் சேமிப்பு ஆகியவற்றைக், கடன் புத்தகத்தின் நடப்புக் கூட்டச் சேமிப்புப் பகுதியில் நாள் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

முந்தைய மொத்த சேமிப்புடன் நடப்புக் கூட்டச் சேமிப்பைக் கூட்டி வரும் தொகையை மொத்த சேமிப்புப் பகுதியில் எழுத வேண்டும்.

## தனிநபர் சிறுசேமிப்புக் கடன் புத்தகம்

***சிறுசேமிப்பு விவரம்***

உறுப்பினர் பெயர் : பூங்கோதை    உறுப்பினர் எண் 11

| *நாள்* | *நடப்புக் கூட்டச் சேமிப்பு* | *மொத்தச் சேமிப்பு* | *சந்தா* | *தலைவர், பொருளாளர் கையொப்பம்* |
|---|---|---|---|---|
| | | *975* | | |
| *31-10-2002* | *25* | *1000* | | |
| *15-11-2002* | *25* | *1025* | *2* | |

## கடன் பகுதிப் பதிவுகள்

தனிநபர் ரசீதை அடிப்படையாக வைத்து ஒவ்வோர் உறுப்பினர் கட்டிய சங்கக் கடன் அசலையும், வட்டி வசூலையும் அவரின் தனி நபர் சிறுசேமிப்புக் கடன் புத்தகத்தில் உரிய இடத்தில் எழுத வேண்டும்.

கடன் வழங்கும் போது கடன் தொகைப் பகுதியில் பதிவு செய்ய வேண்டும். கடன் தொகையிலிருந்து அசல் திருப்பிச் செலுத்தியதைக் கழித்து, மீதிக்கடன் நிலுவையைப் பார்த்துப் பதிவு செய்ய வேண்டும்.

## தனி நபர் கடன் புத்தகம்

கடன் பேரேடு எண் :

உறுப்பினர் பெயர் : பூங்கோதை                                        உறுப்பினர் எண் 11

| நாள் | வவுச்சர் ரசீது எண் | விவரம் | கடன் தொகை | தவணை விவரம் | வட்டி விவரம் | திரும்பச் செலுத்தியது | | கடன் நிலுவை | தலைவர் பொருளாளர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அசல் | வட்டி | | |
| *7-10-2002* | *10* | *மருத்துவக் கடன்* | *2500* | *10 மாதம்* | *2%* | | | *2500* | |
| *7-11-2002* | *1* | | | | | *250* | *50* | *2250* | |

## பார்வையாளர் புத்தகம்

சிக்கனம் மற்றும் சேமிப்பு நாணயச் சங்கப் பார்வையாளர்களிடம் புத்தகத்தைக் கொடுத்து மன்றம் பற்றிய கருத்துகளை எழுதக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இத்தகைய ஆலோசனைகள் சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

# இணைப்பு -1

## சிக்கனம் மற்றும் நாணயச் சங்கத் திட்டம்

உறுப்பினர் விண்ணப்பம்:-

1. பெயர் - திருமதி

2. வீட்டு எண் மற்றும் விலாசம் -

3. அண்டை வீட்டுக்குழு -

4. அண்டை வீட்டுக் கமிட்டி -

5. வயது மற்றும் பிறந்த நாள் -

6. கல்வித் தகுதி -

8. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை -

9. வறுமைக்காரணிகளின் எண்ணிக்கை -

10. உறுப்பினர் கட்டணம் ரூ. 10
செலுத்தப்பட்டதா? இல்லையா?
செலுத்தப்பட்டிருந்தால் செலுத்திய நாள் -

11. கூட்டம் நடத்தும் போதும் பயிற்சி
கொடுக்கும் போதும் தவறாமல்
கலந்து கொள்வீர்களா?

நாள் :

விண்ணப்பதாரரின்
கையொப்பம் / ரேகை

# இணைப்பு -2

## படிவம் - 1

குழு உறுப்பினர் பதிவேடு

குழுப் பதிவேடு

பகுதி....................

| வ. எண். | பெயர் எண் | உறுப்பினர் சேர்ந்த நாள் | உறுப்பினராகக் காரணிகளின் எண்ணிக்கை | வறுமை / பழங்குடியினர் | ஆதிதிராவிடர் எடுத்திருக்கிறீர்கள் | எந்தப் பயிற்சி பதிவேட்டின் போலியோ எண் | சேமிப்பு விபரம் | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|

## படிவம் - 2

வார பதிவேடுள

மாதம்

உறுப்பினரின் சேமிப்புத் தொகை மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்திய விபரம்

| உறுப்பினர் பெயர் மற்றும் எண் | உறுப்பினர் சேர்த்து வைத்த தொகை | | | | | உறுப்பினர்கள் கடன் திருப்பிச் செலுத்தப்பட்ட விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1-வது வாரம் | 2-வது வாரம் | 3-வது வாரம் | 4-வது வாரம் | மொத்தம் | 1-வது வாரம் | 2-வது வாரம் | 3-வது வாரம் | 4-வது வாரம் | மொத்தம் |

இருப்பிட சமுதாயத் தொண்டர் / கன்வீனர்
கையொப்பம் கையொப்பம்

## படிவம் - 3

வாரப் பதிவேடு

மாதம்

உறுப்பினரின் சேமித்த தொகை மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்திய விபரம்

| உறுப்பினர் பெயர் மற்றும் எண் | உறுப்பினரால் சேர்த்து வைக்கப்பட்ட தொகை | | | | | உறுப்பினர் கடனைத் திருப்பிச் செலுத்திய விபரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1-வது வாரம் | 2-வது வாரம் | 3-வது வாரம் | 4-வது வாரம் | மொத்தம் | 1-வது வாரம் | 2-வது வாரம் | 3-வது வாரம் | 4-வது வாரம் | மொத்தம் |

இருப்பிட சமுதாயத் தொண்டர் / கன்வீனர்
கையொப்பம் கையொப்பம்

## படிவம் - 4

## தொகுப்புப் பதிவேடு

சுய (உதவிக்குழு) பதிவேடு - 111

| நாள் | விபரம் | வரவு | கொடுத்த விபரம் | பாக்கி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | பாக்கி இருப்பு விபரம் | | | | |
| | உறுப்பினர்கள் சேமிக்கப்பட்ட தொகை | | | | |
| | கடனைத் திருப்பி செலுத்தியது | | | | |
| | உறுப்பினர்கள் சேமிப்பைத் திரும்பப் பெற்றது | | | | |
| | உறுப்பினர்களுக்குக் கொடுத்த கடன் | | | | |

பெயர் :

முகவரி :

## படிவம் - 5

## தொகுப்புப் பதிவேடு

உறுப்பினர் எண் ...............................

பகுதி 'அ' அண்டை வீட்டுக்குழு பதிவேடு - 1

அண்டை வீட்டுக்கு 4 /97

| நாள் | விபரம் | வரவு | கொடுத்த விபரம் | பாக்கி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | முன் இருப்பு | | | | |
| | வைப்புத் தொகை | | | | |
| | வைப்புத்தொகையில் | | | | |
| | திரும்பப் பெறப்பட்ட தொகை | | | | |
| | மீத வைப்புத்தொகை | | | | |

## படிவம் -6
## கடன் பதிவேடு

அண்டை வீட்டுக்குழு பதிவேடு - 4

கடன் கணக்கு எண் :
கடன் வாங்கியவரின் பெயர் :
தொழில் :
கடன் தொகை : ரூ. 1000/-
திரும்பச் செலுத்தும் காலம் : 12 மாதங்கள்

உறுப்பினர் எண் : அ. வீ. கு. பெயர்
கடன் பெற்ற நாள் :
வட்டி :
தவணை : ரூ. மாதத்திற்கு

| நாள் | கடன் திரும்ப பெற்ற தொகை | இம்மாதத்தில் கிடைக்கப்பெற்ற வட்டித் தொகை | பாக்கி ரூ | குறிப்புரை கடன் வழங்கியது |
|---|---|---|---|---|
| 02-02-1998 | | | 1000 | கடன் வழங்கியது |

## படிவம் -7
## பெறப்பட்ட கடன் பதிவேடு

**அண்டை வீட்டுக்குழு பதிவேடு - 4**

| கடன் விபரம் | திரும்பச் செலுத்தப்பட்டது | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | மொத்தம் |

பெயர் :
நோக்கம் :
தொகை :
திரும்பச் செலுத்தும் காலம் : ரூ.
நாள் : 6 மாதங்கள்

## படிவம் - 8

### பெறப்பட்ட கடன் பதிவேடு

**உறுப்பினர் கணக்குப் புத்தகம்**

திருமதி..........................................அவர்களின் கணக்குப் புத்தகம் (எண் )

| நாள் | விவரங்கள் | வைப்புத் தொகை | திரும்பப் பெற்றது | பாக்கித் தொகை ரூ. | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் - 9

திருமதி..........................................அவர்களின் கணக்குப் புத்தகம் - கடன் வழங்கிய விபரம்

கடன் தொகை : ரூ. தவணைக் காலம் : 12 மாதங்கள்

வட்டி : ரூ. தொழில்

| நாள் | விவரங்கள் | கடன்தொகை திரும்பப் பெறப்பட்டது | கடன் வழங்கியது | பாக்கித் தொகை ரூ. | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் - 10

**உறுப்பினர்களின் பதிவேடு**

**அண்டை வீட்டுக் கமிட்டியின் பதிவேடு 1-ன் பகுதி - 'அ'**

அண்டை வீட்டுக்குழுவின் பெயர் : உருவாக்கப்பட்ட நாள் :

| வ. எண். | உறுப்பினர் பெயர் | உறுப்பினரின் எண் | சேர்ந்த நாள் | மொத்த வறுமைக் காரணிகள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரா? | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|

## படிவம் - 11
### சேமிப்புப் பதிவேடு

**அண்டை வீட்டுக் கமிட்டியின் பதிவேடு 1-ன் பகுதி - 'ஆ'**

அண்டை வீட்டுக் குழுவின் பெயர் :

முகவரி :

| நாள் | விபரங்கள் | காப்புத் தொகை | திரும்பப் பெற்ற தொகை | பாக்கித் தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் - 12

**அண்டை வீட்டுக் கமிட்டியின் பதிவேடு 11**

அண்டை வீட்டுக் கமிட்டிக்கான நாள் புத்தகம்

| நாள் | விபரங்கள் | ரசீது | கொடுத்த விபரம் | பாக்கித் தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் - 13
### கடன் பதிவேடு

**அண்டை வீட்டுக் கமிட்டியின் பதிவேடு 111**

அண்டை வீட்டுக் குழுவின் பெயர் :

| நாள் | வழங்கப்பட்ட தொகை | திரும்பச் செலுத்த வேண்டிய தொகை | பாக்கித் தொகை | குறிப்புரை |
|---|---|---|---|---|

## படிவம் - 14
### கடன் பதிவேடு

**பதிவேடு 1**

சமுதாய மேம்பாட்டுச் சங்கத்திற்கான நாளேட்டுப் புத்தகம் :

| நாள் | விபரங்கள் | ரசீது | கொடுத்த விபரம் | பாக்கித் தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் - 15

**பதிவேடு -1**

*வங்கிக் கடன் கணக்கு (நபார்டு திட்டத்தில்)*

*வங்கியின் பெயர் :*
*கடன் கணக்கு எண் :*
*திருப்பிச் செலுத்தப்படும் காலம் :*
*தவணைத் தொகை :*

*உறுப்பினர் எண் : அ. வீ. கு. பெயர்*
*கடன் பெற்ற நாள் :*
*வட்டி :*
*தவணை : ரூ. மாதத்திற்கு*

| நாள் | விபரங்கள் | பெறப்பட்ட கடன் தொகை தொகை | செலுத்திய வட்டித் தொகை | வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை | பாக்கித்தொகை |
|---|---|---|---|---|---|

## படிவம் - 16

### செயல்முறைப் பதிவேடு

**பதிவேடு 1**

| நாள் | நிறுவனம் | விவரங்கள் | பெறப்பட்ட தொகை | பதிவேடு எண் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|

## படிவம் - 17

### சில்லரைச் செலவின புத்தகம்

**பதிவேடு 1**

| நாள் | நிறுவனம் | ரசீது | செலுத்திய தொகை | பாக்கித் தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|

## படிவம் -18

நிறுவனம் :

பெறப்பட்ட தொகை :

நோக்கம் : சுகாதார முகாம் / எழுத்தறிவு

நாள் / குழந்தைகள் தின விழா

| அண்டை வீட்டுக் கமிட்டியின் பெயர் | நாள் | பெறப்பட்ட தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை | குறிப்புரை |
|---|---|---|---|---|
| அண்டை வீட்டுக் கமிட்டி - 1 | | | | |
| அண்டை வீட்டுக் கமிட்டி - 2 | | | | |
| அண்டை வீட்டுக் கமிட்டி - 3 | | | | |
| அண்டை வீட்டுக் கமிட்டி - 4 | | | | |

## படிவம் - 19

### சேமிப்புக் கணக்குப் புத்தகம்

பதிவேடு 1

| நாள் | ரசீது எண் | விபரம் | | சேமிப்பு | எடுப்பு | இருப்பு | ஒப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | சேமிப்பு | எடுப்பு | | | | |
| 1. | 2. | 3. | | 4. | 5. | 6. | 7. |

## படிவம் -20

### கடன் பெறுதலும் திருப்புதலும்

பதிவேடு 1

| நாள் | ரசீது எண் | விபரம் | | பெற்றது ரூ. | திருப்பியது ரூ. | மீதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெற்றது | திருப்பியது | | | | |
| 1. | 2. | 3. | | 4. | 5. | 6. | 7. |



# தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404 தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net இணையம் : www.tnius.org

நந்தி ரிஜிஸ்தர்ஸ் & பார்ம்ஸ், கோவை - 43.